(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.
Case No. C.C.40/2015

DEPOSITION OF WITNESS FOR PW.1

Name : SAKTHIVEL S/O. LATE. PALANI

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.18

# குறுக்கு விசாரணை

நான் விவசாயம் மற்றும் டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எங்கள் ஊர் ரயில்வேகேட்டில் வேலை செய்து கொண்டிருந்தார். நான் போகும் வரும்போது எனக்கு பழக்கம். ஆஜர் எதிரியின் மகன் திருக்குமரன் என்பவரை எனக்கு தெரியாது. எதிரிக்கு நீங்கள் கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.3,00,000 எந்தவகையில் உங்களுக்கு வருமானமாக வந்தது என புகாரிலோ முதன்மை விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். டிரான்போர்ட் நடத்துவதற்கு வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை. முதல் விசாரணையில் பணத்தை ஏற்பாடு செய்வதாகவும் காசோலை எதிரியிடமிருந்து பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. காசோலை போதுமான பணம் இல்லையென திருப்பப்பட்டதை எதிரிக்கு தெரியப்படுத்தினீர்களா என்றால் 10 நாட்கள் கழித்து நேரடியாக சென்று தெரியப்படுத்தினேன். 19.04.2014ல் போதுமான பணம் இல்லையென திருப்பப்பட்டது குறித்து எதிரிக்கு சட்டபூர்வ அறிவிப்பு அனுப்பினீர்களா என்றால் அனுப்பவில்லை. நீங்கள் சீட்டு நடத்திவருகிறீர்கள் என்று சொன்னாலும், அந்த ரூபாய் 3,00,000 சீட்டுக்காக எதிரியிடமிருந்து காசோலையை பெற்றுள்ளீர்கள் என்று சொன்னாலும் சரியல்ல. ரூபாய் 3,00,000 உங்களிடம் கையிருப்பு இல்லையென்று சொன்னாலும், அவ்வாறு கையிருப்பு இருந்திருந்தால் அந்த தொகை எவ்வாறு வந்தது என்று புகாரிலும் முதன்மை விசாரணையிலும் சொல்லியிருப்பீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு உங்கள் முதன்மை விசாரணை வாக்குமூலத்தின் அடிப்படையில் பணத்தை ஏற்பாடு செய்து தருவதாக மட்டுமே சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி உங்களிடம் அவரது வங்கிக்கணக்கில் போதுமான பணம் இருப்பதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சீட்டுக்கு பிணையமாக கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி எதிரிமீது வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ரூபாய் 3,00,000 பணம் கொடுக்கும்போது எதிரியிடமிருந்து கடனுறுதி சீட்டு எதுவும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான்.